கொண்டு, ஸ்காலர்ஷிப் பணத்தைச் செலவு செய்துவிட்டாலும் அதைத் திரும்பக் கட்டிவிட்டு, அனுகூலமான வேறு ஒரு ஸ்காலர்ஷிப்பைப் பெறுவதற்குள்ள கஷ்டமான ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படியில்லாமல், மாநில கல்வி இலாகாவில் மாணவர்களின் முதல் ப்ரிஃபரன்ஸைக் கேட்டு, அந்தத் திட்டத்தின் கீழ் ஸ்காலர்ஷிப்பை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது குறித்து மேலும் விளக்கங்களைத் தருவார்களானால் நான் பதில் தர முடியும். அடுத்து ஹரிஜன நல மானியக் கோரிக்கை வருகிற காரணத்தினால் கனம் உறுப்பினர் அவர்கள் விளக்கமாகக் கூறலாம். அதற்கு மேல் அது குறித்து நல்ல முறையில் விசாரித்து முடிவு செய்யலாம்.

*** 194 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** மதிப்பிற்குரிய அரிசன நல-செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை மாவட்டத்தில் ஹரிஜன சேவா சங்கத்தினரால் நடத்தப்படும் ஹாஸ்டல்களை அரசாங்கம் ஏற்று நடத்த வேண்டுமென்ற பிரச்சினை சென்ற ஆண்டு எழுப்பப்பட்டிருந்தும் இறுதி உத்திரவுகள் பிறப்பிக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசு உதவி பெறும் மாணவ மாணவியர் இல்லங்கள் அனைத்தையும் படிப்படியாக மேற்கொண்டு அரிசனநலத் துறையின் கண்காணிப்பில் அவற்றை நடத்துவதென அரசு கோட்பாடு வகுத்துள்ளது. சிறாக நிர்வகிக்கப்படாத மாணவ மாணவியர் இல்லங்களை முதற்படியாக அரசு மேற்கொண்டு வருகிறது. மேற்சொன்ன கோட்பாட்டைப் பின்பற்றி 1966–67-ல் மதுரை மாவட்ட அரிசன சேவா சங்கம் நிர்வகிக்கும் மாணவியர் இல்லங்கள் இரண்டினை அரசு மேற்கொள்வதுபற்றி ஆராயப்பட்டது. ஆனால் இந்த இரண்டு இல்லங்களையும் மேற்படி சங்கம் தொடர்ந்து சரிவர நடத்த முடிவு செய்துள்ளதால் இவற்றை அரசு மேற்கொள்வதற்கான தேவை இல்லையென்று கருதப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாழ்த்தப்பட்டோர் நலத் துறைபற்றிய விவாதம் ஒரு நாள் பூராவும் நடக்க இருப்பதால், இதுபற்றிய வினாக்களை இத்துடன் நிறுத்திக்கொள்ளுகிறேன்.

"வானொலி"

*** 195 வினா.—திரு. ஆ. துரையரசன் :** மதிப்பிற்குரிய அரிசன நல-செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

'ஆகாசவாணி' என்பதை 'வானொலி' என்று மாற்ற மத்திய அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆம், ஐயா.

1967 ஜூலை 7]

திரு. செ. பாலசுப்பிரமணியன் : சார், இந்த 'வானொலி' என்ற பெயர்கூட, வாணி என்ற சமஸ்கிருதச் சொல்லும், ஒலி என்ற தமிழ் சொல்லும் சேர்ந்து ஏற்பட்டது என்ற தவறான கருத்து ஏற்படுகிற காரணத்தினால், அதைத் தவிர்த்து, இதற்கு சுத்த, சுயம் பிரகாசமான தமிழ்ப் பதம் ஒன்றைக் கண்டுபிடிக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வானொலி என்ற பெயரே சுத்த சுயம்பிரகாசமான பதமாக இருக்கிறது. அதற்கே அனுமதிப்பதில் இவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : உறுப்பினர் அவர்கள் சுத்த சுயம்பிரகாசமான தமிழ்ப் பதம் வேண்டும் என்று சொல்லு கிறார். சுத்த சுயம்பிரகாசம் என்பதுகூட தமிழ்ப் பதம் அல்ல.

திரு. கே. விநாயகம் : இந்த முயற்சி எந்த அளவில் இருக்கிறது இப்போது? சொன்னதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்களா ? அது அமுலுக்கு வந்ததா ? நேற்று இரவு கூடக் கேட்டேன் ; 'ஆகாசவாணி' என்றுதான் சொல்லப்படுகிறதே, இது குறித்து நிலைமை என்ன ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதுகுறித்து பேரரசு அமைச்சர் அவர்கள் கவனிப்பதாக உறுதி கூறிவிட்டுப் போயிருக்கிறார். இடையிலே செல்வாக்கு உள்ளவர்கள் கொடுக் காமல் இருந்தால் முடியும் என்று நினைக்கிறேன்.

சித்த வைத்தியக் கல்வி

***196 வின.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சித்தக் கல்வி பாட நூல்கள் கமிட்டி என்ற பெயரில் நிபுணர் கமிட்டி அமைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அக்கமிட்டியில் அங்கம் வகிப்பவர்கள் யார், யார் ?

(உ) தற்போது அக்கமிட்டியின் நிலை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை : சபை முன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி எப்போது அமைக்கப்பட்டது? இந்தக் கமிட்டி எத்தனை முறைகள் கூடி என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன ? திருத்தி எழுதுவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய நூல்கள் எவை எவை? பழைய சித்தர்கள் எழுதிய

a 353–355-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.